# COVID-19 பிள்ளைகள்/மாணவருக்குரிய சோதனை

சிறுவர் பராமரிப்பகம்/ JK-12 உள்ள பாடசாலைச் சூழல் ஆகியவற்றில் நுழைவதற்கு முன்னர் தயவுசெய்து இதனைப் பூர்த்தி செய்யவும்.

செப்டம்பர் 1, 2021 இல் புதுப்பிக்கப்பட்டது

**1. இந்தப் பிள்ளை/மாணவருக்குப் பின்வரும் அறிகுறிகள் புதிதாக ஏற்பட்டுள்ளதா அல்லது மோசமடைந்து வருகின்றதா?****

- காய்ச்சல் >37.8°C க்குக் கூடுதலாக மற்றும்/அல்லது குளிருணர்ச்சி
- இருமல்
- சுவாசிப்பதில் சிரமம்
- மணம் அல்லது சுவையுணர்வு குறைதல் அல்லது இழத்தல்
- குமட்டல், வாந்தி அல்லது வயிற்றுப்போக்கு

• இந்தப் பிள்ளை/மாணவரின் அறிகுறிகள் வேறு உடல்நலப் பிரச்சனைகள் காரணமாக ஏற்பட்டிருப்பதாகச் சுகாதாரப் பராமரிப்பாளர் ஒருவரால் ஏற்கனவே கண்டறியப்பட்டிருந்தால், **“இல்லை”** என்று பதிலளிக்கவும். அறிகுறிகள் புதியதாக, வித்தியாசமானதாக அல்லது மோசமடைவதாக இருந்தால் **“ஆம்”** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

**இவற்றில் ஏதாவது அறிகுறிகளுக்கு “ஆம் “ எனப் பதிலளித்திருந்தால்:**

சுயமாகத்-தனிமைப்படுத்தி வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும் + சோதனை செய்து கொள்ள வேண்டும் அல்லது சுகாதாரப் பராமரிப்பாளர் ஒருவரைத் தொடர்பு கொள்ள வேண்டும்

**2. உங்கள் வீட்டில் யாருக்காவது மேலே கூறப்பட்டவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறிகுறிகள் காணப்படுகின்றதா மற்றும்/அல்லது அறிகுறிகள் ஏற்பட்ட பின்னர் சோதனை முடிவுகளுக்காகக் காத்திருக்கின்றார்களா?**

ஆம் ☐ இல்லை ☐

- இந்தப் பிள்ளை/மாணவருக்கு முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டிருந்தால்* அல்லது கடந்த 90 நாட்களில் COVID-19 க்கு நேர்மறையாகச் சோதனை செய்யப்பட்டுக் குணமடைந்திருந்தால், **“இல்லை”** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

**3. கடந்த 10 நாட்களில், இந்தப் பிள்ளை/மாணவர் விரைவான ஆன்டிஜென் சோதனை அல்லது வீட்டு-அடிப்படையிலான சுய-பரிசோதனைக் கருவி மூலம் நேர்மறையாகச் சோதனை செய்யப்பட்டுள்ளாரா?**

ஆம் ☐ இல்லை ☐

- ஆய்வக-அடிப்படையிலான PCR சோதனையில் எதிர்மறையாகக் காணப்பட்டிருந்தால், **“இல்லை”** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

**4. இந்தப் பிள்ளை/மாணவர் COVID-19 உள்ள ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்ததாக அறிவிக்கப்பட்டதா அல்லது சுய-தனிமைப்படுத்தி வீட்டிலேயே தங்கியிருக்கும்படி அவருக்குக் கூறப்பட்டதா?**

ஆம் ☐ இல்லை ☐

- இந்தப் பிள்ளை/மாணவருக்கு முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டிருந்தால்* அல்லது கடந்த 90 நாட்களில் COVID-19 க்கு நேர்மறையாகச் சோதனை செய்யப்பட்டுக் குணமடைந்திருந்தால் அல்லது இந்தப் பிள்ளை/மாணவர் சுய-தனிமைப்படுத்தப்படத் தேவையில்லை எனப் பொது சுகாதாரப் பிரிவு தெரிவித்திருந்தால் **“இல்லை”** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

**5. இந்தப் பிள்ளை/மாணவர் கடந்த 14 நாட்களில், கனடாவுக்கு வெளியே பயணம் செய்திருக்கின்றாரா அத்துடன் federal quarantine requirements இன்படி (மத்திய அரசின் தனிமைப்படுத்தல் நிபந்தனைகளின்படி) தனிமைப்படுத்தப்படுமாறு அறிவுறுத்தப்பட்டாரா?**

ஆம் ☐ இல்லை ☐

**2, 3, 4 அல்லது 5 வது கேள்விகளுக்கு “ஆம்” எனப் பதிலளித்திருந்தால்:**

சுயமாகத்-தனிமைப்படுத்தி வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும் + பொது சுகாதார ஆலோசனையைப் பின்பற்ற வேண்டும்

* இரண்டு டோஸ் தடுப்பூசித் தொடரின் இரண்டாவது டோஸ் அல்லது ஒரு டோஸ் மட்டும் போடும் தொடரில் ஒரு டோஸ் பெற்ற 14 அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களுக்குப் பின்னரே முழுமையாகத் தடுப்பூசி போட்டுக் கொண்டதாகக் கருதப்படுகின்றது.

**நோயேற்பட்ட அல்லது நோயின் அறிகுறிகள் உள்ள யாவரும் வீட்டில் தங்கியிருக்க வேண்டும் அத்துடன் தேவைப்பட்டால் அவர்களின் சுகாதாரப் பராமரிப்பாளரிடம் மதிப்பீடு பெற முயற்சிக்க வேண்டும்